III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.34/2014

Deposition of witness for the Defendant/DW5
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 10-08-2023

Name :Krishnakumar Caste :

Father's/Husband's Name: Calling :

Age : Religion :

Village : Taluk:

**<u>13 முதல் 16 பிரதிவாதிகள் தரப்பில்</u>** <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் 1966ல் பிறந்தேன். பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனது பதிலுரைரயில் குறிடிப்பிடப்பட்டுள்ள விவரங்களை எனக்கு நேரடியாக தெரியாது. பதிலுரையில் உள்ள விவரங்களை நான் தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். செங்கல் தொழிலில் சுப்பையா நாயுடு, ராமமூர்த்தி நாயுடு, பக்தவச்சலம், கோவிந்தசாமி மற்றும் தாமோதரன் ஆகியோர் சேர்ந்து ஈடுப்பட்டு வந்தார்கள். விஸ்வதோதி பிரிக் இன்டஸ்டிரீஸில் கோவிந்தசாமி மற்றும் பக்தவச்சலமும் ப்ங்கு தாரர்கள். விஸ்வஜோதி பிரிக் ஓர்க்ஸில் சுப்பையா நாயுடு, ராமமூர்த்தி நாயுடு, பக்தவச்சலம், கோவிந்தசாமி மற்றும் தாமோதரன் ஆகியோர் பங்குதாரர்கள். இரண்டு பிரிக்ஸ் நிறுவனங்களின் அலுவலகம் ஒரே இடத்தில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. பங்குதாரர் ஆவணம் நான் பார்த்ததில்லை. விஸ்வஜோதி பிரிக் ஓர்க்ஸில் சுலோச்சனா அம்மாள் மற்றும் விஜயா ஆகியோர் பஙட்குதார்களா என்றால் இருக்கலாம். சி அட்டவணை சொத்தை பக்தவச்சலமும் கோவிந்த சாமியும் ஏ்பபோது கிரையம் வாங்கினார்கள் என்று எனக்கு ெ தரியாது. அப்போது நான் சிறுவனாக இருந்தேன் ஆதலால் வருடம் தெரியாது. அந்த கிரையம் பற்றிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. அந்த கிரைய பத்திரத்தை நான் பார்த்ததில்லை. அவர்கள் இருவரும் கிரையம் செய்யும் போது அந்த இடத்தில் செங்கல் தொழில் நடந்து கொண்டிருந்தது. அந்த செங்கல்

தொழில் பற்றிய விவரம் வருமான வரி கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது எனக்கு தெரியாது. எனது பதிலுரையில், எனது அப்பாவினால் விஸ்வஜோதி பிரிக் இன்டஸ்டிரிஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது என்று நான் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. மேலும் பி அட்டவணை 31வது ஐட சொத்து சம்மந்தமாக கோவிந்த சாமி நாயுடுவிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதாவும் பத்திரம் மட்டுமே எழுதி கொடுக்க வேண்டியதாக இருந்தது என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிராதில் 12வது பத்தியில் நானும் 9வது பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து அசல் வழக்கு எண்.6/2011 வழக்கு தாக்கல் செய்து ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்று அதன் மூலமாக விஸ்வஜோதி பிரிக் இன்டஸ்டிரீஸில் இருந்த 5,00,000 செங்கல்லை விற்றுவிட்டது பற்றி சொல்லியுள்ளது பற்றி எனக்கு தெரியும் அது தவறானது. அதை மறுத்து எனது பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆதலால் 5,00,000 செங்கல் விற்றதற்காக adjust செய்யவேண்டி இருந்ததால் பி அட்டவணை 31வது ஐட சொத்தும் சுப்பையா நாயுடுவை சேர வேண்டியது தான் என்று சொன்னால் சரியல்ல. செங்கரை கிராமத்திலுள்ள 38 ஏக்கர் 29 சென்ட்டை கோவிந்த சாமி நாயுடு விற்றதாக சொல்லியுள்ளேன் அது வருமான வரி படிவத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. கோவிந்த சாமி நாயுடு வனஜாவிடமிருந்து பி.த.சா.4 மற்றும் 5 முன்னிலைக்கு பொது அதிகாரம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்துக்களாக தான் உள்ளது என்றால் பாகம் பிரிக்கப்படவில்லை. ஆதலால் தாவா சொத்துக்களில் வனஜாவின் வாரிசுதார்களான பிரதிவாதிகள் 13 முதல் 16 வரையிலானோருக்கு 1/5 பாகம் உள்ளது என்றால் சுப்பையா நாயுடுவின் சொத்துகளில் உள்ளது. ஆதலால் தாவா சொத்துக்கள் அனைத்திலும் 1/5 பாகம் குறித்து பிரதிவாதிகள் 13 முதல் 16 வரையிலானோருக்கு முதல் நிலை தீர்ப்பாணை கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.